**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை மற்றும் அதன் துணை நிறுவனம் - 2025**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ''சபை'' மற்றும் அதன் துணை நிறுவனத்தின் ''தொகுதி'' இன் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கையின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 111 வாகனங்களுக்கான வாகன நிறுத்துமிட வசதியைப் பயன்படுத்தும் ஒரு நிறுவனம் ரூபா 2,664,000 (8,000x3x11) பாதுகாப்பு வைப்புத்தொகையைச் செலுத்த வேண்டியிருந்த போதிலும் ரூபா 1,584,000 | நவம் மாவத்தையில் உள்ள கார் நிறுத்துமிட வசதியைப் பயன்படுத்தும் ஒரு தனியார் நிதி நிறுவனம் ஆரம்பத்தில் 66 வாகனங்களுக்கான பாதுகாப்பு வைப்புத்தொகையை சபைக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. பின்னர் புதிதாக 45 வாகனங்கள் இதில் | அறவிட வேண்டிய பாதுகாப்பு வைப்புத்தொகைகளை அறவிடவும் எதிர் காலத்தில் இத்தகைய சூழல்கள் உருவாவதைத் தடுக்கவும் |

| | | | |
|---|---|---|---|
| | மட்டுமே செலுத்தப்பட்டிருந்தது. மீதமுள்ள ரூபா 1,080,000 தொகை இன்னும் அறவிடவில்லை. | சேர்க்கப்பட்டன இதற்காகத் தேவைப்படும் ரூபா 1,080,000 பெறுமதியான பாதுகாப்பு வைப்புத்தொகையை அறவிடுவதற்கு நிறுவனத்தில் இது தொடர்பாக பொறுப்பாகவுள்ள அதிகாரி மின்னஞ்சல் (email) மற்றும் தொலைபேசி ஊடாக அறிவித்ததுடன் அத்தொகையைச் செலுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். | நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டும். |
| (ஆ) | ஏறக்குறைய 1.5 முதல் 17 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஓய்வுபெற்ற 06 அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 108,415 அளவிலான கடன் அல்லாத காசு நிலுவைகளும் 1.5 முதல் 4 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஓய்வுபெற்ற 04 அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,211,035 அளவிலான கடன் நிலுவைகளும் 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடவில்லை. | தொடர்புடைய நிலுவைத் தொகைகளை எதிர்காலத்தில் அறவீடு செய்வது குறித்துத் பிரிவுத்தலைவர்களுக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகைகளை அறவீடு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சபைச் சட்டம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 16(1) உறுப்புரை | ஊழியரின் மொத்த பெறுவனவுகளில் மூன்று சதவீதத்திற்கு இணையான பங்களிப்புத் தொகையை அடுத்த மாதத்தின் கடைசி நாளுக்குள் அல்லது அதற்கு முன்னதாக குறித்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய கடமை தொழில்தருநர்களுக்கு இருப்பினும், 2001 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் சபையில் பதிவு செய்யப்பட்ட 20 ஆடைத் தொழிற்சாலைகள் அவை தொடங்கப்பட்டதிலிருந்து, 15 துப்புரவுச் சேவை வழங்கும் நிறுவனங்கள் அத்துடன், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் உள்ள 29 ஹோட்டல்கள் மற்றும் 12 உணவகங்கள் ஆகியவை 2025 ஆம் ஆண்டிற்கான பங்களிப்புத் தொகையைச் செலுத்தத் தவறியுள்ளன. இவற்றுள் 51 நிறுவனங்கள் கள ஆய்வுக்கு உட்படுத்தவில்லை. | பங்களிப்புத் தொகையைச் செலுத்தத் தவறிய பல நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அந் நிறுவனங்களில் பங்களிப்புத் தொகையை பெற்றுக்கொள்ள கள ஆய்வுகள் மேற்கொள்ளல், எழுத்துப்பூர்வ அறிவிப்புகள், மற்றும் சட்ட நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல வருட காலமாக பணியாளர் குழுவின் பற்றாக்குறை, பதிவு செய்யப்பட்ட முகவரிகளில் நிறுவனங்கள் பௌதீக ரீதியான இல்லாத நிலை மற்றும் நிறுவனங்கள் செயலற்ற நிலையில் இருத்தல் போன்ற சிக்கல்கள் காணப்படுகின்றதுடன், இச்செயல்பாடுகளைத் தாமதமின்றி மேற்கொள்வதற்கான தேவையான வழிமுறை தொடர்பாக ஆய்வொன்று நடைபெற்று வருகிறது. | சட்டத்தின் விதிகளுக்கு இணங்க தொடர்புடைய நிறுவனங்களில் கள ஆய்வுகளை மேற்கொள்வதற்கான நடைமுறையை அறிமுகப்படுத்தவும், பங்களிப்புத் தொகையைச் செலுத்தத் தவறிய அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் பங்களிப்புகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 16.3 உறுப்புரை | தொழில்தருநர்களால் சபைக்கு செலுத்தப்படும் பங்களிப்பு தொகைகள் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் தனிப்பட்ட கணக்குகளில் வரவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 1981 தொடக்கம் 2024 ஆண்டு வரையான காலத்தில் 6612 தொழில்தருநர்களால் சபைக்கு வரவு வைக்கப்பட்ட ரூபா மில்லியன் 911.27 | 2026 மே 20 ஆம் திகதிக்கு ஒதுக்கீடு செய்யப்படாத காசு மீதி ரூபா 876,405,047 ஆகும். எதிர்காலத்தில் இச்சூழ்நிலையைக் குறைக்கும் வகையில் பங்களிப்புகளை இணையவழி அமைப்பு மூலமாகச் செலுத்துவது கட்டாயமாக்கப்படுவது மற்றும் Form II Text File இணையவழி அமைப்பு வாயிலாக வழங்குவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் விதிகளுக்கு இணங்க அங்கத்தவர்களின் கணக்குகளில் பங்களிப்புகளை ஒதுக்கீடு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொகை, 2026 ஏப்ரல் 27 ஆம் திகதி வரையிலும் வரவு வைக்கப்படாமல் இருந்தது. இத்தொகையில், 2015 தொடக்கம் 2024 வரையிலான காலப்பகுதியில் 6211 அங்கத்தவர்களுக்குச் சேர வேண்டிய ரூபா மில்லியன் 896.74 அடங்கும். | | |
| (ஆ) | 2023 செப்டம்பர் 27 ஆம் திகதியிட்ட சுற்றறிக்கை எண் 01/2021 (ii) இன் பந்தி 03 | வரையறுக்கப்பட்ட இலங்கை உப்பு கம்பனியின் பங்கு மூலதனத்தில் 90 சதவீதத்தை சபை கையகப்படுத்தியதன் மூலம் அது ஒரு துணை நிறுவனமாக மாற்றியிருந்த போதிலும் அத்தகைய நிறுவனங்கள் தொடர்பான கொள்கைகள் எதுவும் சுற்றறிக்கையின் தேவைகளுக்கு ஏற்ப இன்னும் வகுக்கவில்லை. | வரையறுக்கப்பட்ட இலங்கை உப்பு கம்பனியின் (துணை நிறுவனம்) தொடர்பான கொள்கை திட்டங்களை வகுக்கும் பணி இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திடம் (SLIDA) ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. | கொள்கை திட்டங்களை வகுக்கும் பணி நிறைவு செய்வதை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2023 செப்டம்பர் 27 ஆம் திகதியிட்ட சுற்றறிக்கை எண் 01/2021 (iii) இன் பந்தி 02 | | | |
| (i) | | சபையின் நிதி மற்றும் செயற்பாட்டு நடைமுறைகள் அடங்கிய கோவைக்கான அங்கிகாரம் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து இன்னும் பெறவில்லை. | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் (SLIDA) உதவியுடன் சபையின் செயற்பாட்டு நடைமுறைகளைப் புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அங்கீகரிக்கப்பட்ட நிதி நடைமுறை வழிகாட்டி 2022 ஜீன் 23 ஆம் திகதி அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் விதிகளுக்கு இணங்க அங்கிகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | பந்தி 20 | ஊழியர் வகைப்படுத்தலின் அடிப்படையில் வழங்கப்படும் திரட்டப்பட்ட கொடுப்பனவு ஊழியர் நிலையின் அடிப்படையில் வழங்க வேண்டும் என்று சுற்றறிக்கை கட்டளையிட்டிருந்த போதிலும், சபை இதற்கு முரணான வகையில் செயற்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை எண் 01/2025 இன் பிரிவு 20 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அட்டவணை 111 இல் வரையறுக்கப்பட்டுள்ள ஊழியர் வகைப்பாட்டின் அடிப்படையில் திரட்டப்பட்ட கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பான விடயத்தை எதிர்வரும் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை விதிமுறைகளை மீறிப் பணம் செலுத்தப்பட்டிருந்தால் அப்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதுடன் எதிர்காலத்தில் இத்தகைய சூழல் ஏற்படாதவாறு உறுதிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2024 பெறுகை வழிகாட்டுதல்கள் பிரிவு 2.4 (ஆ) (iii) பந்தி | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நலத்திட்டங்கள் குறித்து அங்கத்தவர்களுக்குத் விழிப்புணர்வை ஏற்படுத்த செயல்முறைக்கான பெறுகை குழுவானது தனது முதல் கூட்டத்திலேயே விரிவான விளம்பரத்திற்கான திகதிகள், முறைகள் பெறுகை ஆவணங்களை வெளியிடுதல், மற்றும் விலைக்கேள்விகள் பெறுதல், முடிவு செய்தல் மற்றும் திறத்தல் ஆகியவற்றைத் தீர்மானித்திருக்க வேண்டியிருந்ததுடன் ரூபா மில்லியன் 15 செலவிடப்பட்ட இக்கொள்முதல் செயல்முறை தொடர்பாக அத்தகைய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளவில்லை. | ஆரம்பகட்ட பெறுகை நடவடிக்கையின்போது குறிப்பிட்ட காலக்கெடு ஏதும் நிர்ணயிக்கவில்லை என்றாலும் கணக்காய்வு பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கான காலக்கெடுவானது பெறுகை செயல்முறையைச் செயல்படுத்தும்போதே நிர்ணயிக்கப்பட்டது. 2026 ஆம் ஆண்டு முதல் இக்குறையைச் சரிசெய்வதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டுதல்களை மீறிச் செயல்பட்ட அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதுடன் எதிர்காலத்தில் இத்தகைய சூழல் மீண்டும் ஏற்படாதவாறு உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2025 ஆம் ஆண்டில் சபையால் வழங்கப்பட்ட பணிக்கொடைத் தொகை ரூபா 34,507,000 ஆக இருந்தபோதிலும் முதலீடுகள் | காசுப்பாய்ச்சல் கூற்றின் படி பணிக்கொடைத் தொகை ரூபா 34,507,000 ஆகும். இது 2025 ஆம் ஆண்டிற்கான | மதிப்பீட்டிலான வருமானத்தைக் கணக்கிடும்போது சரியான |

| | | | |
|---|---|---|---|
| | மீதான மதிப்பீட்டிலான வருமானத்தைக் கணக்கிடும்போது ரூபா 43,821,000 தொகை பணிக்கொடைச் செலவினமாகக் கழிக்கப்பட்டது. இதன் விளைவாக முதலீடுகள் மீதான மதிப்பீட்டிலான வருமானம் ரூபா 9,314,000 குறைவாகக் காட்டப்பட்டது அத்துடன், வருமான வரிச் செலவு மற்றும் வருமான வரிப் பொறுப்பு ஆகியவை ரூபா 1,303,960 குறைவாகக் கணக்கிடப்பட்டது. | உண்மையான பணிக்கொடைச் செலுத்துதலைக் குறிப்பதால் வருமான வரியைக் கணக்கிடும்போது இது கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுமதியை பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருமானச் சட்டத்தின் பிரிவு 11(1) இன் பிரகாரம் ஒரு மதிப்பீட்டு ஆண்டில் வியாபாரம் அல்லது முதலீட்டிலிருந்து ஒரு நபர் ஈட்டும் வருமானத்தைக் கணக்கிடும் போது அந்த வியாபாரம் அல்லது முதலீட்டிலிருந்து வருமானம் ஈட்டுவதற்காகச் செய்யப்பட்ட செலவுகள் கழிக்கப்பட வேண்டும் என்று இச்சட்டம் குறிப்பிடுகிறது. 2025/2026 ஆம் ஆண்டிற்கான முதலீடுகள் மீதான மதிப்பீட்டிலான வருமானத்தைக் கணக்கிடுகையில் சபையின் உறுப்பினர்களின் 5 ஆம் தரம் பயிலும் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட புலமைப்பரிசில் உதவித்தொகையான ரூபா 3,110,000 தொகையை சபை கழித்ததுடன் இது முதலீட்டு வருமானம் ஈட்டுவது தொடர்பான செலவு அல்ல என்பதால் சபையின் முதலீடுகள் மீதான வரிக்குரிய வருமானம் ரூபா 3,110,000 ஆல் குறைக்கப்பட்டது அதேவேளையில் வருமான வரிச் செலவு மற்றும் வருமான வரிப் பொறுப்பு ஆகியவை ரூபா 435,400 ஆல் குறைக்கப்பட்டது. | 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பிரிவு 7 இன் கீழ் ஊழியர் நலன் என்பது ஒரு பிரதான நோக்கமாகும் என்பதுடன் இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அங்கத்தவர்களுக்கான சேவைகளை வழங்குவது சபையின் சட்டபூர்வமான பொறுப்பாகும். புலமைப்பரிசில் நன்மைகளைப் பெறுவதற்கு, அந் நன்மைகள் கோரப்படும் மாதத்திற்கு முன்னைய 12 மாத காலப்பகுதியில் அங்கத்தவர் ஒருவர் ஊ.ந.பொ.நி சபைக்கு தொடர்ச்சியாகப் பங்களிப்புகளைச் செலுத்தியிருக்க வேண்டும். இந் நன்மைகள் வழங்குவது அங்கத்தவர்களைச் சரியான நேரத்தில் பங்களிப்புகளைச் செலுத்த ஊக்குவிக்கிறது இதன் மூலம், சபைக்குச் சேர வேண்டிய முதலீட்டு வருமானம் தாமதமின்றி கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது. அதன்படி, புலமைப்பரிசில் செலவுகளுக்கும் சபையின் முதலீட்டு வருமானத்திற்கும் இடையே நேரடித் தொடர்பு (nexus) இருப்பதால், வரி நோக்கங்களுக்காகக் | 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் கீழ், சம்பந்தப்பட்ட தொழில்தருநர்கள்பங்களிப்புகளைச் செலுத்துவது ஒரு சட்டபூர்வமான கடமையாகும் இது அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்களிலிருந்து தனித்து இயங்கும் ஒன்றாகும். எனவே முதலீட்டு வருமானத்தைக் கணக்கிடும் பணிகள் அச்சட்டத்தின் விதிகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | புலமைப்பரிசில் செலவுகளை அனுமதிக்கப்பட்ட (allowable) செலவுகளாகக் கருத வேண்டும். | |
| (இ) | சபையினால் 2025 ஆம் ஆண்டுக்கான முத்திரைக்கட்டணமாக ரூபா 292,550 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இணக்கப்பாடு செய்யப்பட்ட முத்திரைக்கட்டணம் பற்றிய கூற்றின் பகுதி 01 ஐப் பூர்த்தி செய்யும் போது, சபையினால் சான்றுப்பத்திர வகை சரியாக இனம் காணப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அனைத்து முத்திரைக்கட்டணங்களும் ‘‘சம்பளப் பற்றுச்சீட்டு’’ வகையின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | சம்பள வழங்குதல் தொடர்பாக பொருத்தமான தேவைப்பாடுகளுக்கு ஏற்ப முத்திரைத் வரித் தொகைகள் குறைக்கப்பட்டு செலுத்தப்பட்டுள்ளதுடன், பிற தொடர்புடைய கட்டணங்களுக்கான முத்திரை வரிகள் பொருத்தமான உறுப்புரைகளின் பிரகாரம் முறையாகச் சரிசெய்யப்பட்டுள்ளது. | ஆவண வகையைச் சரியாக அடையாளம் காண வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுகளின் அடிப்படையில், மீளாய்வாண்டின் குழுமத்தின் நிதி விளைவு ரூபா மில்லியன் 59,089 இலாபமாகவும் சபையின் நிதி விளைவு ரூபா மில்லியன் 58,899 இலாபமாகவும் இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் குழுமத்தின் மற்றும் சபையின் இலாபங்கள் முறையே ரூபா மில்லியன் 55,200 மற்றும் ரூபா மில்லியன் 54,498 ஆக இருந்தது. அதன்படி, நிதி விளைவானது குழுமத்திற்கு ரூபா மில்லியன் 3,889 உம், சபைக்கு ரூபா மில்லியன் 4,401 உம் அதிகரித்துள்ளது. மீளாய்வாண்டில் சபையின் வட்டி வருமானத்தில் ஏற்பட்ட ரூபா மில்லியன் 6,947 அளவிலான அதிகரிப்பே இதற்கு காரணமாக அமைந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் செயற்பாட்டுடைய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நன்மைகள் தொடர்பாக முழு நாடு தழுவிய ஒலி ஒளித் நிகழ்ச்சி திட்டமொன்றை ரூபா மில்லியன் 17.5 செலவில் 2025 ஆம் ஆண்டு செயற்படுத்தியதுடன் செலவு 45,340 சதவீதம் அதிகரித்த அதேவேளையில், | 2025 ஆம் ஆண்டு முதல் முழு நாடு தழுவிய ரீதியில் உறுப்பினர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த ஒலி ஒளி ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. கடந்த காலங்களில் பிரச்சார நடவடிக்கைகளுக்கு குறைவான பங்களிப்பை வழங்கியதால் விளம்பரச் செலவுகள் அதிகரிக்கவில்லை என்பதுடன் அதிக பிரச்சாரத்தை வழங்க சபை ஒரே தடவையில் கணிசமான செலவை மேற்கொண்டதன் விளைவாக, | நிகழ்ச்சிதிட்டத்தின் நோக்கங்களை அடைவதற்குத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அது தொடர்பான முன்னேற்றத்தை மதிப்பிடும் அறிக்கையொன்றை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டிலும் சபை ஈட்டிய வருமானத்தில் உறுப்பினர்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளின் விகிதம் முறையே 0.5 சதவீதமாகவும் 0.6 சதவீதமாகவும் இருந்தது. அதற்கிணங்க, உறுப்பினர்களை விழிப்புணர்வை ஏற்படுத்த சபை கணிசமான செலவை மேற்கொண்டு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதியில் நன்மைகள் கோரும் போக்குகள் குறித்த பகுப்பாய்வை மேற்கொண்டு அதன் முன்னேற்றம் மற்றும் எதிர்காலச் நடவடிக்கைகள் தொடர்பாக மதிப்பீடு செய்யவில்லை. | செலவினங்களில் 45,340 சதவீதம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தச் செலவினத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகள் ஒரே ஆணடிற்குள் மதிப்பிட இயலாததுடன் பல ஆண்டுகளுக்கு நீடிக்கும். இப்பிரச்சாரங்கள் மூலம் கிடைக்கும் நன்மைகள் அளவு மற்றும் தரம் சார்ந்தவையாகும். அதற்கேற்ப, இதன் மூலம் பெறப்பட்ட அளவு மற்றும் தர ரீதியான பெறுமதியை மதிப்பிடுவதற்காக எதிர்காலத்தில் ஒரு கணக்கெடுப்பை நடத்த சபை திட்டமிட்டுள்ளது. | |
| (ஆ) | சபைக்கு சொந்தமான நவம் மாவத்தை நிலத்தில் நிறுவப்பட்டுள்ள 2 விளம்பரப் பலகைகளில் ஒன்று 2016 ஆம் ஆண்டிலிருந்தும் மற்றொன்று 2022 ஆம் ஆண்டிலிருந்தும் பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றாமலேயே ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்குத் தொடர்ந்து ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிறுவனத்துடன் முறையான ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | இவ் விளம்பரப் பலகைகள் சம்பந்தமாக கட்டணங்கள் அறவிட்டு பராமரிக்கப்பட்டு வந்தபோதிலும், வணிக பெறுமதியுடைய இந்த நிலத்தின் தற்போதைய கட்டணங்கள் போதுமான அளவு பிரதிபலிக்காததால், அரசாங்கத்தால் மதிப்பிடப்பட்ட மதிப்பின் அடிப்படையில் கட்டணத்தை நிர்ணயிக்கப் பரிந்துரைக்கப்பட்டது. அதற்கிணங்க, சபையின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் அரசாங்க மதிப்பீட்டைப் பெறுவதற்காக 2026 ஜனவரி 12 ஆம் திகதி அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் வேண்டுகோள் கடிதமொன்று அனுப்பபட்டது இருப்பினும், மதிப்பீட்டு அதிகாரிகள் பற்றாக்குறை காரணமாக இச்செயல்முறையை குறுகிய காலத்திற்குள் நிறைவு செய்ய இயலவில்லை. | முறையான மதிப்பீட்டு அறிக்கையைப் பெறுவதற்கும் பெறுகை செயல்முறையின் மூலம் நிறுவனத்திற்கு அதிக நன்மைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளை ஆராய்வதற்கும் அதற்கேற்ப செயல்படுவதற்கும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபை 2011 ஆம் ஆண்டில் ஒரு தனியார் நிறுவனத்தின் 761,478 பங்குகளை வாங்கியது 2025 திசெம்பர் 31 திகதி அவற்றின் சந்தை பெறுமதி ரூபா 48,811,600 ஆக இருந்தது. 2020 முதல் 2024 ஆம் ஆண்டு வரையில் இந்த முதலீடுகள் மூலம் பங்குலாபம் பெறவில்லை என்பதுடன், 2025 ஆம் ஆண்டில் பெறப்பட்ட பங்குலாப வருமானம் ரூபா 383,739 ஆக இருந்தது. 2020 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில் சபை இந்நிறுவனம் தொடர்பான பங்குச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை அத்துடன், இத்தொகையைச் சிறந்த நன்மைகள் பெறும் நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. | குறிப்பிட்ட நிறுவனத்திலான முதலீடானது, நீண்ட கால முதலீட்டுத் தொகுப்பின் கீழ் உள்ள ஹோட்டல் துறையைச் சார்ந்ததாகும். 2011 முதல் 2020 வரையில் ரூபா மில்லியன் 24.16 பங்குலாப வருமானமாகப் பெறப்பட்டதுடன் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இந் நிறுவனத்தின் பங்குகளை விற்பனை செய்ததன் மூலம் ரூபா 18 மில்லியன் மூலதன இலாபம் ஈட்டப்பட்டது. இருப்பினும், கோவிட் பெருந்தொற்று மற்றும் 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நாட்டின் பொருளாதார மந்தநிலை காரணமாக சுற்றுலா மற்றும் ஹோட்டல் துறை இழப்புகளைச் சந்தித்தது இதன் விளைவாக 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையில் எந்தவொரு பங்குலாபமும் அறிவிக்கப்படவில்லை என்பதுடன், 2025 ஆம் ஆண்டு முதல் சுற்றுலாத் துறை விருத்தியடைந்ததைத் தொடர்ந்து, அந்நிறுவனம் மீண்டும் இலாபம் ஈட்டும் நிலையை அடைந்ததுடன், ரூபா 383,739 பங்குலாபமும் பெறப்பட்டது. எதிர்வரும் ஆண்டுகளிலும் பங்குலாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது அத்துடன், பங்குகளின் சந்தை விலை உயரும் பட்சத்தில் மூலதன இலாபத்துடன் அவற்றை விற்பனை செய்யவும் எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது. | நிதி முதலீடு செய்யும்போது சபைக்கு அதிக நன்மைகள் பெற்றுக்கொள்ள கூடிய முதலீடுகளில் நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2002 ஆம் ஆண்டில், சபை ரூபா 2,224,218,565 செலவில் ஸ்ரீலங்கா டெலிகாம் நிறுவனத்தின் 3,302,188 பங்குகளை வாங்கியது. கடந்த 5 ஆண்டுகளில் இப்பங்குகள் மூலம் பெறப்பட்ட பங்குலாபம் ரூபா 13,241,773 ஆக இருந்தது. பொதுத் திறைசேரியின் அறிவுறுத்தலின் பேரில் 2008 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீலங்கா டெலிகாம் பங்குகளை விற்பனை செய்வது நிறுத்தப்பட்டு 17 | இப்பங்குகளைச் சந்தையில் விற்பனை செய்திருந்தால் மூலதன இலாபம் கிடைத்திருக்கும் இருப்பினும், அத்தகைய பரிவர்த்தனை Sri Lanka Telecom நிறுவனத்தின் பங்குகள் அரசாங்கத்தின் பங்குரிமையைப் பாதிக்கும் என்பதால், நிதி அமைச்சின் முன் அனுமதியின்றி விற்பனை எதையும் மேற்கொள்ளக்கூடாது என்று பொதுத் திறைசேரி 2008 பெப்ரவரி 25 ஆம் திகதியிட்ட கடிதம் மூலம் எழுத்துப்பூர்வமாக அறிவுறுத்தியதைத் தொடர்ந்து அந்த விற்பனை நிறுத்தப்பட்டது. இப்பங்குகளின் | நிதி முதலீடு செய்யும்போது சபைக்கு அதிக நன்மைகள் பெற்றுக்கொள்ள கூடிய முதலீடுகளில் நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், சபை எவ்வித மூலதன இலாபத்தையும் பெறாமல் இப்பங்குகளைத் தொடர்ந்து தன்வசம் வைத்துள்ளது. உறுப்பினர்களின் பங்களிப்பால் அமைந்த இந்த நிதியத்தின் தொகையை நீண்ட காலத்திற்கு இத்தகைய முறையில் பராமரித்து வந்தமையால் அங்கத்தவர்களுக்குக் கிடைக்கும் நன்மைகளின் அளவைப் பாதித்துள்ளது. | உண்மையான மொத்த கிரயம் ரூபா 110,340,299.24 ஆகவும், ஒரு பங்கின் உண்மையான கிரயம் ரூபா 33.41 ஆகவும் இருந்தது. SLT நிறுவனத்தின் 2026 ஏப்ரல் 30 திகதிக்கு ஒரு பங்கின் சந்தை விலை ரூபா 86.00 ஆக இருந்தது. இப்பங்குகள் 2026 பெப்ரவரி 2 ஆம் திகதி ரூபா 107.25 ஆன அதிக சந்தை பெறுமதியில் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்டன. இப்பங்குகளை 17 ஆண்டுகாலம் முதல் மூலதன இலாபத்தை ஈட்டாமலே தங்கள் வசம் வைத்திருக்க வேண்டிய நிலை சபைக்கு ஏற்பட்டது. | |
| (உ) | காசோலை சேவைகளை வழங்குவது தொடர்பாக 2006 ஆகஸ்ட் 06 ஆம் திகதியிட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கை வங்கி மற்றும் சபை ஆகியவற்றிற்கு இடையே எட்டப்பட்ட உடன்படிக்கையின்படி, ரூபா மில்லியன் 10 மற்றும் ரூபா மில்லியன் 490 மதிப்பிலான இரண்டு வைப்புத்தொகைகள் இலங்கை வங்கியில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஏறக்குறைய 20 ஆண்டுகளாகப் பராமரிக்கப்பட்டு வரும் இந்த வைப்புத்தொகைகளுக்கு, சந்தையில் நிலவும் ஒப்பீட்டளவில் அதிக வட்டி விகிதங்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை சபை மேற்கொள்ளவில்லை. இவ்வளவு நீண்ட காலத்திற்கு ரூபா 500 மில்லியன் இலங்கை வங்கியில் வைத்திருந்ததன் மூலம் அதிக நன்மையை ஈட்டுவதற்கான வாய்ப்புகளை சபை தவறவிட்டது. | சபையின் முதன்மைப் பங்களிப்பு அறவிடும் கணக்கைப் பராமரிப்பதற்கு வசதியாக இலங்கை வங்கி மற்றும் சபை ஆகியவற்றிற்கு இடையே எட்டப்பட்ட உடன்படிக்கையின்படி, ரூபா மில்லியன் 500 தொகை ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படும் வகையிலான நிலையான வைப்புகள் மற்றும் மீள் கொள்முதல் ஒப்பந்தங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இவ் முதலீடுகளை ஆண்டுதோறும் புதுப்பிக்கும் (Renew) போது மீள் கொள்முதல் ஒப்பந்தங்கள் மற்றும் நிலையான வைப்புகளுக்கு மூன்று அரச வங்கிகளில் அத் தினத்தில் காணப்படும் வட்டி விகிதங்கள் ஒப்பிடப்பட்டு மிகவும் சாதகமான வட்டி விகித்தின் கீழ் இலங்கை வங்கியில் முதலீடு செய்யப்படுகின்றன. இச்சேவைகளை வழங்குவதற்காக 2005 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை சபை மாதந்தோறும் ரூபா 100,000 சேவைக்கட்டணத்தைச் செலுத்தி வருகிறது. | மாதாந்த சேவைக் கட்டணமாக ரூபா 100,000 செலுத்தப்பட்டு வருவதால் சபைக்கு அதிகப் நன்மைகளைப் பெறுவதற்கான வழிகளை ஆராய்வதற்கும் அதற்கேற்ப நிதியைச் தகுந்த முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வு ஆண்டின் இறுதியில் சபையில் பதிவு செய்யப்பட்ட சுயதொழில் புரியும் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 45,400 ஆகவும், புலம்பெயர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 328 ஆகவும் இருந்தது முன்னைய ஆண்டில் இவ்வெண்ணிக்கை 44,494 ஆக இருந்தது. 2025 ஆம் ஆண்டில் 16 பிராந்திய அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் மூலம் மொத்தம் 1226 உறுப்பினர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் இதில் அனுராதபுரம், பதுளை, காலி, யாழ்ப்பாணம், கண்டி, இரத்தினபுரி மற்றும் வவுனியா ஆகிய அலுவலகங்கள் மூலம் இணைக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒவ்வொன்றிலும் 30 க்கும் குறைவாகவே இருந்தது. மீளாய்வு ஆண்டின் இறுதியில் சுயதொழிலில் செயலற்ற உறுப்பினர்கள் மற்றும் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை முறையே 26814 மற்றும் 162 ஆக இருந்தது. அவ்வாண்டில் சுயதொழிலில் செயலற்ற 500 உறுப்பினர்களை மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டுவரத் திட்டம் வகுக்கப்பட்டிருந்த போதிலும், சுமார் 39 சதவீதத்தினரான 195 உறுப்பினர்கள் மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டனர். | செயலுள்ள உறுப்பினர்களின் பங்கேற்பை அதிகரிப்பதற்கான தந்திரோபாயங்களை உள்ளடக்கிய ஒரு திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்துமாறு தொடர்புடைய பிரிவுகளுக்கு எழுத்துப்பூர்வமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. இதன் முன்னேற்றத்தைக் கண்காணிக்குமாறு உள் கணக்காய்வு பிரிவுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. | உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க தந்திரோபாயங்கள் வகுக்க வேண்டும். |
| (ஆ) | க.பொ.த (உயர்தர) தேர்வில் தேர்ச்சி பெற்ற உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு, ஒரு பாடநெறிக்கு அதிகபட்சமாக | நிபுண சவிய மற்றும் விஸ்வ யாத்ரா ஆகிய திட்டங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பிள்ளைகளுக்கு வழங்கப்படும் நிதியுதவி | குறிக்கோள்களை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 50,000 வரையிலான செலவில், தேர்ந்தெடுக்கப்பட்ட 100 தொழிற்கல்விப் பாடநெறிகளில் ஒன்றைப் பயில்வதற்கான வாய்ப்பை வழங்க முடிவு செய்யப்பட்டது. 2023 ஆம் ஆண்டு முதல் 840 மாணவர்களுக்கு வழங்க ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ரூபா மில்லியன் 42 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2023/2024 ஆண்டுகளில் பெறப்பட்ட 373 விண்ணப்பங்கள் 2024/2025 ஆண்டுகளில் அது 84 ஆனதால் சபையின் எதிர்பார்த்த நோக்கங்களை அடைவதில் ஏற்பட்ட முன்னேற்றம் குறைவாகவே இருந்தது. | அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் இலத்திரனியல் ஊடகம்,அச்சு ஊடகங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஊடாக இத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை உறுப்பினரகளிடையே அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், இது தொடர்பாக எதிர்காலத்திலும் விரிவான விழிப்புணர்வுகள் திட்டமிடப்பட்டுள்ளன. நீண்ட கால அடிப்படையில், அதிக எண்ணிக்கையிலான பருவ பிள்ளைகள் இதற்கு விண்ணப்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். | |
| (இ) | 2025 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு சபையில் பதிவு செய்யப்பட்ட மொத்த தொழில்தருநர்களின் எண்ணிக்கை 235,624 ஆக இருந்தபோதிலும், மீளாய்வு ஆண்டின் இறுதியில் செயல்பாட்டில் இருந்த தொழில்தருநர்களின் எண்ணிக்கை 84,491 ஆக அதாவது 35.8 சதவீதமாக இருந்தது. செயல்பாட்டில் உள்ள தொழில்தருநர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் புதிய தொழில்தருநர்களைக் கண்டறியவும் சபை மேற்கொண்ட நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்த வேண்டுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | சபை தனது உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகப் பல்வேறு தந்திரோபாயங்களை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் சபையின் இணையதளம், உள்ளூர் செய்தித்தாள்கள் மூலம் பிரச்சார நிகழ்ச்சி திட்டங்கள் மூலம் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படும் நேரடி அஞ்சல் அறிவிப்புகள் ஆகியவற்றின் மூலம் அது தொடர்பாக தகவல்களைப் பிரச்சாரம் செய்துள்ளது. சபையின் பிரதேச அலுவலகங்கள் மூலம் செயல்படுத்தப்படும் முறையான ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டதைத் தொடர்ந்து செயல்படும் நிலையில் உள்ள தொழில்தருநர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கவும் புதிய தொழில்தருநர்களைக் அடையாளம் காணவும் உரிய நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. | பதிவுசெய்யப்பட்ட தொழில்தருநர்களின் செயல்பாட்டு நிலையை அவ்வப்போது ஆராய்வதற்கு ஒரு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டு அது தொடர்ந்து புதுப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2016 ஆகஸ்ட் 26 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சியாண்மைகள் பற்றிய | இச்சட்டத்தின் பிரிவு 5(2) பிரிவை திருத்துவதற்கான நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டு முதல் | பொது முயற்சியாண்மைகள் பற்றிய குழுவின் |

| | | | |
|---|---|---|---|
| | குழு கூட்டத்தில் சபையின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி ஆகிய பதவிகளை ஒரே நபர் வகிக்கும் நடைமுறையைச் சட்டத் திருத்தத்தின் மூலம் மாற்றியமைக்குமாறு அறிவுறுத்தியிருந்த போதிலும், 08 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இப்பணி துரிதப்படுத்தி அத் திருத்தம் மேற்கொள்ள இயலாமல் உள்ளது. | மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் தற்போது சபையால் முன்மொழியப்பட்ட திருத்த சட்டமூலத்தை முன்னெடுத்துச் செல்வதற்குப் புதிய அமைச்சரவை அனுமதியைப் பெறும் பொருட்டு, தொடர்புடைய ஆவணங்களை நிதியமைச்சிடம் சமர்ப்பிக்குமாறு 2025 அக்டோபர் 14 ஆம் திகதி அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, தொடர்புடைய அமைச்சரவைப் பத்திரம் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டு 2025 நொவம்பர் இல் அங்கீகரிக்கப்பட்டு வரைவு அமைச்சரவைப் பத்திரம் 2025 திசெம்பர் 17 ஆம் திகதி நிதியமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. | பரிந்துரைகளை விரைவாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2025 திசெம்பர் 31 ஆம் திகதக்கு நவம் மாவத்தை வாகன நிறுத்துமிடத்தில் வாகனங்களை நிறுத்தியவர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய மொத்த நிலுவைத் தொகை ரூபா 6,858,325 ஆகும் இத்தொகையில், 90 நாட்களுக்கும் மேலாகச் செலுத்தப்படாமல் நிலுவையில் இருந்த தொகையானது ரூபா 3,950,000 ஆகும். மாத வாடகை அடிப்படையில் வாகனங்களை நிறுத்திய 78 தரப்பினர் இருந்தபோதிலும், அவர்களில் ஒருவருடன் மட்டுமே சபை ஒப்பந்தம் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. | நிலுவைத் தொகைகள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் எதிர்காலத்தில் முன்கூட்டியே பணம் செலுத்துவதன் மூலம் குறிப்பாக மாதத் தொடக்கத்திலேயே கட்டணம் செலுத்துவதன் மூலம் இவ்வாகன நிறுத்துமிட வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கான ஒரு நடைமுறையை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. | மாதாந்த வாடகை அடிப்படையில் வாகங்கள் நிறுத்துமிடங்களை அனைத்து நிறுவனங்களுடனும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன், நிலுவையில் உள்ள அனைத்து வாடகைத் தொகைகளும் அறவிடப்பட வேண்டும் மற்றும் எதிர்காலத்தில் இத்தகைய நிலை மீண்டும் ஏற்படாதவாறு தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2025 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கோரப்படாத இறப்புச் நன்மைகளின் பெறுமதி ரூபா மில்லியன் 29.5, 1,327 பயனாளிகள் தொடர்பானவை இருந்தது. இது முன்னைய ஆண்டில் ரூபா மில்லியன் 27.9, 1,295 பயனாளிகள் தொடர்பானவை இருந்தது. உறுப்பினர்களின் வாரிசுகள், | மேற்கூறிய மீதித் தொகையிலிருந்து 2026 ஆம் ஆண்டில் 09 நபர்களுக்கு மொத்தம் ரூபா 742,217 விடுவிக்கப்பட்டது. இறந்த சபை உறுப்பினர்களின் கணக்குகளில் உள்ள நன்மைகளைப் பெறுவதற்கு அவர்களின் வாரிசுதாரர்கள் அல்லது நியமனதாரர்கள் | உறுப்பினர்களின் வாரிசுகள் மற்றும் சார்ந்திருப்பவர்கள் குறித்த விவரங்களை உடனடியாகப் புதுப்பிக்கவும் அதற்கான நன்மைகளை வழங்கவும் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | சார்ந்திருப்பவர்கள் மற்றும் நியமனதாரர்கள் குறித்த விவரங்களைப் புதுப்பித்து தொடர்புடைய நன்மைகளை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை. | அனைவரும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத காரணத்தினாலேயே இத்தகைய கணக்கு மீதிகள் உருவாகின்றன. பல வாரிசுதாரர்கள் அல்லது நியமனதாரர்கள் குறித்த தனிப்பட்ட விவரங்கள் இல்லாமை மற்றும் அவர்களில் சிலர் வெளிநாட்டில் வசிப்பது போன்ற காரணங்களால், கோரப்படாத இறப்புப் நன்மைகளின் மீதித் தொகை படிப்படியாக அதிகரித்துள்ளது. இந்த மீதித் தொகை ஆண்டுதோறும் அதிகரித்தாலும் இது இறந்த உறுப்பினர்களின் சில வாரிசுகளுக்கு அதன் நன்மைகளைப் பெறும் வாய்ப்பை அளிக்கிறது. | எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2025 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கோரப்படாத பொது நலன் சார்ந்த கணக்குகளின் மொத்த மீதித் தொகை ரூபா மில்லியன் 9.029 இருந்தது இதில் ரூபா மில்லியன் 4.6 தொகை 2001 முதல் 2024 வரையிலான காலப்பகுதியைச் சார்ந்ததாகும். இந்த மீதித் தொகைகளைத் தீர்வு செய்வதற்கோ அல்லது அவற்றை உறுப்பினர்களின் கணக்குகளில் மீண்டும் வரவு வைப்பதற்கோ எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. | 2026 ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு 40 பயனாளிகளுக்கு ரூபா 3,374,534.75 வழங்கப்பட்டுள்ளது. மேலும் 448 பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய ரூபா 5,654,629 மீதியில் உள்ளது. பயனாளிகளுக்கு தொலைபேசிச் செய்திகள் வழங்குதல் அல்லது கடிதங்கள் மூலம் அப்பயனாளிகளைத் தொடர்புகொள்ள இயலாமை மற்றும் பயனாளிகள் ஆர்வம் இல்லாமையினால் இத்தொகையை விடுவிக்க முடியவில்லை. 448 பயனாளிகளில் 280 பேர் அதாவது 60 சதவீதம் ரூபா. 5,000 க்கும் அதிகமான மீதித் தொகையைக் கொண்டுள்ளனர். பயனாளிகளைத் தொலைபேசிச் மூலம் தொடர்புகொண்டு இது குறித்துத் தெரிவித்து சரிசெய்வது நடைபெற்று வருகின்றது. | தொடர்புடைய பயனாளிகளை உடனடியாகக் கண்டறிந்து பணம் வழங்குவதை விரைவுபடுத்தவும் விவரங்களைக் கண்டறிய முடியாத அங்கத்தவர்கள் கணக்குகளில் மீதித் தொகையை வரவு வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | புதிய கணினி அமைப்புத் திட்ட நடவடிக்கைகளுக்காக 2023 ஆம் ஆண்டில் வாங்கப்பட்ட 21 QR Code Printers மொத்த பெறுமதி ரூபா 2,478,000 மற்றும் 44 QR Code Scanners மொத்த பெறுமதி ரூபா 2,277,572 ஆகியவை மூன்றரை ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் பயன்பாடின்றி வைக்கப்பட்டிருந்தது. | இத்திட்டம் 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் தொடங்கத் திட்டமிடப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்ட காலத்துக்குள் செயல்பாட்டு ஏற்பு அமர்வுகளைத் தொடங்க முடியவில்லை. தொடர்புடைய வன்பொருள் கூறுகளைக் கொள்முதல் செய்ய வேண்டியதன் அவசியத்தை ICTA நிறுவனத்தின் மூலம் தொடர்ந்து வலியுறுத்தியிருந்ததால் சம்பந்தப்பட்ட அமைச்சின் ஒப்புதலைப் பெற்ற பிறகு பெறுகை செயல்முறை மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் தொடங்கப்பட்டதன் பிறகு இவ்வியந்திரங்களுக்கான தேவை எழுகிறதுடன் அதற்கேற்ப அவற்றைப் பயன்படுத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட திட்டங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் தேவையான பணிகளை மேற்கொள்ளத் தவறியமைக்கான காரணங்களை ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும், அச் சொத்துக்கள் அவற்றின் நோக்கத்திற்கேற்ப பயன்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான நவம் மாவத்தையில் அமைந்துள்ள 19319 சதுர அடி பரப்பளவைக் கொண்ட 2025 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா மில்லியன் 21.41 பெறுமதியை கொண்டதுமான இரண்டு மாடிக் கட்டிடம் எந்தவொரு முதலீட்டு வருமானத்தையும் ஈட்டுவதற்குப் பயன்படுத்தவில்லை. | நவம் மாவத்தை காணியில் அமைந்துள்ள இக்கட்டிடம் வாகன நிறுத்துமிடப் பணியாளர்களுக்கான தங்குமிட வசதிகள் அதனுடன் தொடர்புடைய களஞ்சிய வசதிகள் மற்றும் வாகன நிறுத்துமிடம் சார்ந்த செயல்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. மேற்கூரையுடன் கூடிய இக்கட்டிடத்தின் ஒரு பகுதி வாகனங்களை நிறுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. தற்போது எமது நிதியம் புதிய கட்டுமான மற்றும் முதலீட்டுத் திட்டங்களைத் தொடங்குவது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. | குறிப்பிட்ட கட்டிடத்தை இன்னும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராய்ந்து அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

| கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மூன்று ஆண்டு காலத்திற்குள் சபையின் செயல்பாடுகள் மற்றும் சேவைகளின் செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் வகையில், உறுப்பினர்களை மையமாகக் கொண்ட ஒரு அமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் 2016 நொவம்பரில் இலங்கையின் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப பிரதிநிதிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்ட போதிலும், அந்த அமைப்பு இன்னும் அதிகாரப்பூர்வமாகச் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்படவில்லை. திட்டப் பணிகள் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் நிறைவடையாததால் ரூபா 2,400,000 கட்டணத்தில் ஓராண்டு காலத்திற்கு ஒரு தகவல் தொழில்நுட்ப ஆலோசகரின் சேவைகள் பெறப்பட்டது. 2025 திசெம்பர் இறுதியில் இத்திட்டத்திற்காக சபை மேற்கொண்ட மொத்தச் செலவு ரூபா மில்லியன் 193 இருந்தது. இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவடையாத நிலையில் சபை புதிய ஒப்பந்தம் எதையும் மேற்கொள்வதற்கான இது வரையிலும் நடவடிக்கைகளை எடுக்கவில்லை. | திட்டமிடப்பட்ட கால வரையறைக்குள் செயல்பாடுகளை நிறைவு செய்ய இயலாமைக்கு கோவிட் சூழலால் ஏற்பட்ட தாமதங்கள், மாற்றக் கோரிக்கைகளை (CR) நிறைவேற்றத் தேவைப்பட்ட கணிசமான நேரம், அமைப்பு பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்னதாகவே வேறு பல முக்கிய மாற்றங்களை நிறைவு செய்ய வேண்டிய அவசியம் மற்றும் OAT-ஆரம்பிக்க முன்னரான சோதனையின்போதுத சிக்கல்கள் மற்றும் குறைபாடுகள் ஆகியவை இத்திட்டத்தின் முகாமையில் பிரதானமாக தாக்கத்தை ஏற்படுத்தின. 2024 ஆம் ஆண்டிற்கான இத்திட்டத்திற்காகத் தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் ஒருவர் ஓராண்டு காலத்திற்கு பணியமர்த்தப்பட்டதுடன் சபையின் தற்போதைய வியாபார தேவைகளுக்கும் புதிய அமைப்பிற்கும் இடையே முரண்பாடு இருப்பது கண்டறியப்பட்டதால் திட்டமிட்டபடி OAT செயல்முறையைத் திட்டமிட்ட வகையில் ஆரம்பிக்க இயலாமை அறியப்பட்டது. இத்திட்டத்தின் செயல்பாட்டுப் பொறுப்பை எங்கள் சபையிடம் ஒப்படைக்க ICTA நிறுவனத்தின் பணிப்பாளர் குழு தீர்மானம் செய்துள்ளதால் உரிய அனுமதிகளைப் பெற்ற பிறகு புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளும் நடவடிக்கையை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். | அமைப்பை ஒரு நேரடிச் செயல்பாட்டு நடைமுறையாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்தி எதிர்பார்த்த நோக்கங்களை அடைய உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் பிரதிப் பொது முகாமையாளர் (உறுப்பினர் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்ட அதிகாரியின் தனிப்பட்ட கோப்பினை ஆய்வு செய்தபோது சேவை அனுபவத்திற்கான | 2021 ஆம் ஆண்டில் பிரதிப் பொது முகாமையாளர் (உறுப்பினர் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டவரின் சேவை அனுபவத்தைச் சரிபார்க்க அவரது முன்னைய சேவை செய்த சேவை நிலையங்களுக்கு தலைவர்களுக்கு | சேவைச் சான்றிதழ்களைச் கோவைப்படுத்தப்பா டாமைக்கு காரணங்கள் ஆராய்ந்து அதற்கேற்பத் |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பெண்களை வழங்குவதற்குத் தேவைப்படும் சேவைச்சான்றிதழ்கள் இணைக்கவில்லை | அனுப்பப்பட்ட கடிதத்திற்குப் பதில் பெறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தாபனவிதிக் கோவையின் II அத்தியாயத்தின் 1 முதல் 10 வரையிலான பிரிவுகளின்படி நியமன அதிகாரியின் எந்தவொரு காரணத்திற்காகவும் அல்லது நிறுவனங்கள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி இன்றி எந்தவொரு காரணத்திற்காகவும் நியமனம் ஒன்றை முன்திகதியிட முடியாத போதிலும் 2020 செப்தெம்பர் 01 ஆம் திகதி முதல் உதவி நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்ட ஒருவரின் நியமனத் திகதி 2016 ஜூன் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் முன்திகதியிடப்பட்டிருந்தது. | 2020 செப்தெம்பர் 01 ஆம் திகதி நியமிக்கப்பட்ட உதவி நிர்வாக அதிகாரியின் பதவி உயர்வு திகதியை முன்திகதியிட்டுச் சரிசெய்வது தொடர்பான பரிந்துரைகள் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெறப்பட்டுள்ளன இது குறித்த அடுத்தகட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளை மீறும் வகையிலான செயல்பாடு குறித்து ஆராய்ந்து அதற்கேற்ப பொறுப்பான அதிகாரிகள் மீது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் II இன் பிரிவு 13.1.2 இன்படி பதில் நியமனத்திற்குப் பரிந்துரைக்கப்படும் ஒரு உத்தியோகத்தர் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி தேவைப்படும் அனைத்துத் தகுதிகளையும் கொண்டிருக்க வேண்டும் என்ற போதிலும், கணிஷ்ட முகாமைத்துவ நிலை II தரத்திலான ஒரு பதவியின் கடமைகளை ஆற்றிவந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு 2021 திசெம்பர் 22 ஆம் திகதி முதல் முகாமையாளர் நலன்கள் நிர்வாகம் (MM 1-3) பதில் நியமனத்திற்குப் நியமிக்கப்பட்டுள்ளார். | முகாமையாளர் (நலன்கள் நிர்வாகம்) பதவியில் ஒரு கணிஷ்ட முகாமைத்துவ நிலை உத்தியோகத்தர் வகித்து வரும் பதில் நியமனத்திற்குப் சரிசெய்வது தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க, எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளை மீறும் வகையிலான செயல்பாடு குறித்து ஆராய்ந்து அதற்கேற்ப பொறுப்பான அதிகாரிகள் மீது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அகக் கணக்காய்வு பிரிவிற்கான அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை 15 ஆக இருந்தபோதிலும் 2025 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு உண்மையான பணியாளர் | அகக் கணக்காய்வுப் பிரிவின் பிரிவுத்தலைவர் அப்பிரிவின் எதிர்காலச் செயல்பாடுகளுக்கான திட்டத்தைத் தயாரித்து அதில் பணியாளர் தேவைகளின் அடிப்படையில் அடுத்தகட்ட | வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு தகுதியான உத்தியோகத்தர்களை விரைவாக |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை 05 ஆக மட்டுமே இருந்தது. உதவிப் பொது முகாமையாளர் (அகக் கணக்காய்வாளர்) பதவி 2023 ஆம் ஆண்டிற்கு முதலிருந்தே வெற்றிடமாக இருந்ததுடன் தற்போது அப்பிரிவில் உள்ள பணியாளர்களில் 03 உத்தியோகத்தர்கள் மட்டுமே தேவையான தகுதிகளைக் பூர்த்தி செய்திருந்தனர். | ஆட்சேர்ப்பு மேற்கொள்ள தேவையான தகவல்களை நிர்வாக மற்றும் மனிதவளப் பிரிவுக்கு எழுத்து மூலம் வழங்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு எதிர்பார்த்த வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார். | நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயற்பாட்டு திட்டம் மற்றும் குறிக்கோள் சார்ந்த செயல்பாடுகளின் முன்னேற்றம்**

| | கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் உறுப்பினர்களுக்கான சேவைகளை எளிதாக்கும் வகையில் சேவை பீடங்கள் (Servicedesk) அமைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்த போதிலும், அவை இன்னும் செயல்படுத்தவில்லை. | இப்பணிக்காக ஒரு ஆலோசகர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன் அவருடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக ஒப்பந்த பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது. இது இறுதி செய்யப்பட்டவுடன் பணிகள் உடனடியாகத் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | திட்டமிடப்பட்ட சேவை பீடங்கள் அமைப்பதற்கு அவசரமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வு ஆண்டுச் செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ள நிர்வாக மற்றும் மனிதவளத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புதியதொரு செயல்திறன் மதிப்பீட்டு முறையை வடிவமைத்து பொது முயற்சிகள் திணைக்களத்திடம் அனுமதியைப் பெறுதல், மற்றும் நவம் மாவத்தை வாகன நிறுத்துமிடத்திற்கு மின்னணு நுழைவாயில் அமைப்பை நிறுவுதல் ஆகிய பணிகள் இன்னும் நிறைவடையவில்லை. | அமைப்பின் அனைத்துச் செயல்பாடுகளுக்கான செயல்திறன் மதிப்பீடுகளையும் கருத்தில் கொண்டு ஒரு புதிய் செயல்திறன் குறிகாட்டி (KPI) அமைப்பு உருவாக்கப்பட்டு அதற்கு பணிப்பாளர் சபையின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளதுடன் பொது முயற்சிகள் திணைக்களத்திடம் அடுத்தகட்ட அங்கிகாரத்தை பெற்ற பிறகு இந்தச் செயல்திறன் மதிப்பீட்டு முறையைச் சரியாகச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நவம் மாவத்தை நிறுத்துமிடத்திற்கு மின்னணு நுழைவாயில் அமைப்பை நிறுவுவதற்கான பெறுகை செயல்முறையை மேற்கொள்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றது. | புதிய செயல்திறன் மதிப்பீட்டு முறைக்கு தேவையான அங்கிகாரத்தை பெற்று விரைவாக உருவாக்கிச் செயல்படுத்துவதற்கும்,மின்னணு நுழைவாயில் அமைப்பை நிறுவி இயக்குவதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2024 ஆண்டின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் உறுப்பினர்கள் தங்கள் தனிப்பட்ட கணக்கு மீதியை குறுஞ்செய்தி மூலம் | உறுப்பினர்களுக்கு நேரடியாகத் தகவல்களைத் தெரிவிக்கவும் ஒலி ஒளி ஊடகங்கள் வாயிலாக அவர்களுக்கு e-service வசதிகளை வழங்கவும் நடவடிக்கைகள் | உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் அங்கத்தவர்கள் |

| | | |
|---|---|---|
| சரிபார்க்கும் வசதியை சபை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2.6 மில்லியன் செயல்பாட்டில் உள்ள உறுப்பினர்களில் 35,662 பேர் இவ்வசதியைப் பெறுவதற்காக சபையிடம் தற்போது பதிவு செய்துள்ளதாகத் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நன்மைகளுக்கு விண்ணப்பிக்கும் போது மாத்திரம் ஒருவரின் செயல்பாட்டிலுள்ள உறுப்பினர் நிலையைச் சரிபார்ப்பதற்கான மின்னணுச் சேவையைப் பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வை மேலும் அதிகரிக்க வேண்டிய தேவை இருந்தது. | மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் விளைவாக மூன்று மாதக் காலப்பகுதிக்குள் 1938 புதிய அங்கத்தவர்கள் பதிவு செய்துள்ளனர் மேலும் இந்த வளர்ச்சியைத் தொடர்ந்து அதிகரிப்பதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் முன்னேற்றத்தை ஒவ்வொரு காலாண்டிலும் பெற்று தேசிய கணக்காய்வு அலுவலகத்திடம் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. | உரிய சேவைகளை பெற்று கொள்ள பதிவு செய்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| | கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி 134(3) இன் படி உள்ளகத் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளைத் கணக்காய்வு தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், மீளாய்வு ஆண்டிற்கு வெளியிட்ட கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் அவ்வாறு சமர்ப்பிக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டு முதல் தேவையான திருத்தங்கள் குறித்த அறிவுறுத்தல்கள் உள்ளகத் கணக்காய்வு பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் உரிய நடைமுறைகளின்படி தொடர்புடைய அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை விதிகளுக்கு இணங்காத எந்தவொரு செயல் குறித்தும் ஆராய்ந்து தேவையான நடவடிக்கை எடுப்பதும், எதிர்காலத்தில் தொடர்புடைய அறிக்கைகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதை உறுதி செய்வதும் அவசியமாகும். |
| (ஆ) | ஊக்குவிப்புத் தொகைகள், போனஸ் மற்றும் விடுப்புப் படிகள் தொடர்பாக சபையின் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டவை குறித்து உள்ளகத் கணக்காய்வு பிரிவு 100 சதவீதம் அளவிலான முன் | 2026 ஆம் ஆண்டு முதல் தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் சுட்டிக்காட்டப்பட்ட அம்சங்களை உள்ளடக்கிய ஒரு உள்ளகத் கணக்காய்வுத் திட்டத்தை வகுக்கவும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரைகள் மற்றும் | உள்ளகத் கணக்காய்வில் உள்ளடக்கப்படாத பிரிவுகள் பற்றி சிறப்புக் கவனம் செலுத்தி அத்தகைய |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வு சோதனையை மேற்கொண்டிருந்த போதிலும், சபையின் சொத்துகள் அனைத்து வகையான இழப்பு மற்றும் சேதங்களிலிருந்தும் பாதுகாக்கப்படுகின்றனவா என்பதை சோதனை செய்தல், அத்துடன் நிலையான சொத்துகள் பதிவேடு மற்றும் சொத்துகளின் வருடாந்த நேரில் சரிபார்ப்பு ஆகியவற்றை சோதனை செய்வதல், சபையின் பிரிவுகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகள் தொடர்பான செயல்பாடுகளைக் சோதனை செய்தல், பிரதேச அலுவலகங்களை சோதனை செய்தல் மற்றும் இடர் பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் மதிப்பீட்டு சோதனைகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளவில்லை. | பணிப்பாளர் சபையின் அங்கிகாரத்திற்கு இணங்க கணக்காய்வை மேற்கொள்ளவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இச்செயல்முறையின் முன்னேற்றம் குறித்த அறிக்கைகளை அவ்வப்போது தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட பிரிவுகளை சோதனைக்குட்படுத்தி தேவையான திட்டங்கள வகுத்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 நொவம்பர் 17 ஆம் திகதியிட்ட சுற்றறிக்கை எண் 01/2021 இன் பந்தி 4.2 ஆம் பந்தி படி ஆண்டுக்குக் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்றபோதிலும், மீளாய்வு ஆண்டில் குழு கூட்டங்கள் 02 மட்டுமே நடத்தப்பட்டன. | 2026 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நியமித்த முறையில் நடத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான கூட்டம் ஏற்கனவே நடத்தப்பட்டுவிட்டது இரண்டாம் காலாண்டிற்கான கூட்டம் ஜூன் மாதத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளின் விதிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் இத்தகைய சூழல்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.3 சைபர் பாதுகாப்பு நடவடிக்கைகள்

| கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தகவல் சொத்துகளின் இரகசியத்தன்மை, கிடைக்கும்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்யும் வகையில் அங்கீகரிக்கப்படாத அணுகல், தடுப்பு, மாற்றம் அல்லது அழிவிலிருந்து அவற்றைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு அறிமுகப்படுத்தபடபட்டுள்ள சைபர் பாதுகாப்பு கொள்கையை அனைத்து அரசு நிறுவனங்களும் பின்பற்ற வேண்டும் என்று தொழில்நுட்ப அமைச்சு 2023 மே 02 ஆம் திகதி வெளியிட்ட சுற்றறிக்கை எண் MOT/2023/01 கட அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சபைக்குள் தகவல் பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவ குழுக்களை அமைத்தல், அத்துடன் தகவல் சொத்துக்கள் பதிவேடுகள் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சொத்துக்களுக்கான பதிவேடுகளைப் பராமரித்தல் போன்ற நடவடிக்கைகள் சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்கு இணங்க இன்னும் முழுமைப்படுத்தவில்லை. | சபையின் கீழ் தகவல் பாதுகாப்பு குழு அமைத்தல் மற்றும் இடர் முகாமைத்துவ குழு அமைத்தலுக்காக வரைவுகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றதுடன் தேவையான அங்கீகாரம் பெறப்பட்டதும் இவற்றைச் செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தகவல் சொத்துக்களின் பதிவேட்டைத் தயாரிப்பதற்கு (SLCERT) இன் ஆலோசனை தேவைப்படுகிறது அதனைத் தொடர்ந்து அப்பதிவேட்டைத் தொகுப்பதற்கான திட்டங்கள் உள்ளன. தற்போது இப்பதிவேடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.தகவல் தொழில்நுட்பச் சொத்து பதிவேட்டைத் திறம்பட உருவாக்குதல், புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்கான மென்பொருளை வாங்குவதற்கு 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் விதிகளுக்கு இணங்க தேவையான குழுக்களை நியமிக்கவும் பதிவேடுகளைப் பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |